முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி மார்கழி மாதம் 29ம் திகதி முதல் தை மாதம் 6ம் திகதி வரை**

**ஜனவரி 13ம் திகதி முதல் ஜனவரி 20ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1. தவசிகளும் தரும நெறிகளும்**
**தவபலமும் கொண்ட தமிழகமே**
**புவனம் வியக்க சமதர்மமும்**
**புண்ணியமும் மிகுந்த பரதமே**

**2. பரதம் தமிழகம் தன்னில்**
**பாடிடுவேன் விளம்பி சிலை திங்கள் தன்னில்**
**இருபான் நவதிகதி மேல் கலை திங்கள்**
**இருமூன்று திகதி வரையான வார நிகழ்வின்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 29ம் நாள் 13.01.2019, ஞாயிறு முதல் தை மாதம் 6ம் நாள் 20.01.2019, ஞாயிறு முடிய)**

**3. நிகழ்வின் எதிர்கால பலனை**
**நிலமதனில் சுப்பிரமணியர் யானும்**
**வகைபட வார ஆசியாக உரைப்பேன்**
**வறுமை மக்களின் துன்பம் போக்கா**

**4. போக்கா செயல்படும் திட்டங்கள்**
**போக்கிடம் அறியா மறையும்**
**தேக்கமான பேரிடர் மீட்பு பணிகள்**
**தேசமதில் பூர்த்தியாகா வண்ணம்**

**5. வண்ணமுடன் வருகின்ற தேர்தல்**
**வளர்ச்சி வெற்றிக்கு வழியில்லை**
**மண்ணை ஆளும் மன்னர்கள்**
**மக்கள் சக்தியின் மகத்துவம் அறிய வேண்டும்**

**6. வேண்டாம் இனி ஊழல் வழிமுறை**
**வேண்டாம் இனி இலவச முறைகள்**
**வேண்டிய வண்ணம் வேலை வாய்ப்பு**
**வளர்ச்சிக்கான வழிவகை செய்யும்**

**7. செய்யும் அரசே உலகினில்**
**சேவல் கொடியான் என் ஆசிபட**
**மெய்ஞான ஆட்சியாக மாறும்**
**மத்தியும் மாநில ஆளுமைகள்**

8. ஆளுமைகள் பகட்டான செயல்்கள்
அதிகாரம் வழியான செயல்கள்
வலுவானால் வளர்ச்சி கெடும்
வகுப்புவாத மத இன வாத தூண்டல்

9. தூண்டல் மிகுந்தால் தேசமெங்கும்
தொடரும் ஒற்றுமை குலையும்
உண்டான சூழலை மாற்றி
உலகளவில் பரதமும் தமிழகமும் தானும்

10. தானுமே சமதர்ம சமத்துவ வழியான
தவராசன் அரங்க ஞானி நெறி
ஞானவழியாக ஏற்றுத் தொடர
ஞானஆட்சியாக பரதம் தமிழகம் மாறும் வார ஆசி நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் மார்கழி மாதம் 29ம் நாள் 13.01.2019, ஞாயிறு முதல் தை மாதம் 6ம் நாள் 20.01.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

தருமத்தின் நெறிகளையும், தவம் செய்கின்ற தவசிகளையும் எல்லையில்லா தவபலமும் கொண்டிட்ட தமிழகத்திலும் உலகமே வியக்குமாறு எத்தனை வேற்றுமைகள் இருந்தபோதும் சமதர்மத்தையும், புண்ணியத்தையும் மிகுதியாகக் கொண்ட ஒற்றுமைமிக்க பாரத தேசத்திலும் விளம்பி வருடம் மார்கழி மாதம் 29ம் நாள் 13.01.2019, ஞாயிறு முதல் தை மாதம் 6ம் நாள் 20.01.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

மக்களின் துன்பங்களையும் வறுமையையும் போக்க முயற்சிக்காமல் செயல்படுத்தப்படும் திட்டங்கள் போட்ட இடம் தெரியாமல் மறைந்து போய்விடும். இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும், மீட்புப் பணிகள் பூர்த்தி செய்யாமல் நடத்தப்படும் தேர்தல்களினால் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் வழியில்லை. நாட்டை ஆட்சி செய்கின்ற ஆட்சியாளர்கள் மக்களையும் மக்கள் சக்தியையும் அறிந்திட வேண்டும்.

நாட்டினில் இனி ஊழல் வழிமுறைகள் வேண்டாமப்பா. மக்களை ஏமாற்றும் இலவச முறைகள் எல்லாம் வேண்டாமப்பா. மக்களுக்கு தேவையான வேலைவாய்ப்புகளை உருவாக்கி மக்களுக்கு தகுந்த வேலைவாய்ப்பினை அளித்தால் அது நாட்டின் வளர்ச்சிக்கு வழிவகை செய்யும்.

இப்படிப்பட்ட ஊழலற்ற நேர்மையான அரசே இவ்வுலகினில் முருகப்பெருமான் எனது ஆசியுடன் நடக்கின்ற மெய்ஞான ஆட்சியாக மாறி மக்களுக்கு எல்லா நன்மைகளையும் தருகின்ற நல்லாட்சியாக ஆகும்.

இந்தியாவை ஆளும் மத்திய அரசினில் ஆட்சியில் உள்ள ஆட்சியாளர்களும் மாநில ஆட்சி பொறுப்பில் உள்ள ஆட்சியாளர்களும் தங்களது பகட்டான செயல்பாடுகளை மாற்றிட வேண்டும், அதிகாரத்தினால் மக்களை நிர்பந்திக்கும்விதமாக செயல்பட்டால் நாட்டின் வளர்ச்சி பாதிக்கும்.

நாட்டினில் வகுப்புவாதங்கள் மதவாதங்கள் இனவாதங்களை தூண்டி செயல்படுவோரின் செயல்பாடுகள் அதிகமானால் நாடெங்கிலும் தொடர்ந்து நிலவும் ஒற்றுமை சீர்குலையும் அபாயம் உண்டாகும். ஆதலினால் நாட்டின் ஒற்றுமையை குலைக்கும்விதமாக செயல்படும் சூழ்நிலைகளை மாற்றி ஒற்றுமையை வலியுறுத்தும்விதமாக செயல்பட வேண்டும்.

இவ்விதம் நாட்டினில் உள்ள ஆட்சியாளர்களும் மக்களும் செயல்பட உலக அளவில் பாரததேசமும் தமிழகமும் சமதர்ம சமத்துவ நெறிமுறை வழியான தவராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தூயநெறிக் கொள்கைகளை ஞானவழிக் கொள்கைகளாக ஏற்றுத் தொடர்ந்திட இவ்வுலகினில் பாரததேசத்தில் ஞானஆட்சி மலர்ந்திடும். பாரததேசமும் தமிழகமும் மிகச்சிறப்பான மாற்றங்களை அடைந்திடும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–